தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 109/ந/2022
நாள். 14.09.2022

திரு. கோ. வெங்கடேசன்,
கொமாரபாளையம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
கொமாரபாளையம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம், கிழக்கு காலனி, சுள்ளிமடைத் தோட்டம், கதவு எண் 10A–2 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கோ. வெங்கடேசன் என்பவரின் 25.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.07.2022 அன்று பெறப்பட்டு 109/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம், கிழக்கு காலனி, சுள்ளிமடைத் தோட்டம், கதவு எண் 10A–2 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கோ. வெங்கடேசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம் நகராட்சி துணைத் தலைவராக உள்ளேன். நான் போட்டியின்றி தேர்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கொமாரபாளையம் நகராட்சியில் நலத்திட்டங்கள் சார்ந்தோ, ஒப்பந்தங்கள் சார்ந்தோ, நிர்வாக ரீதியிலோ, எனக்கு நகராட்சி ஆணையாளர் திரு.விஜயகுமார் மூலமோ அல்லது அலுவலர்கள் மூலமோ எந்தவொரு தகவலும் கிடைப்பதில்லை.

கொமாரபாளையம் நகராட்சி மூலம் அறிவிக்கப்படும் ஒப்பந்த அறிவிப்பாணைகள் நகர்மன்ற துணை தலைவரான எனக்கோ, பல நகர்மன்ற உறுப்பினர்களுக்கோ எந்தவித முன்னறிவிப்பும் செய்யாமல் ஒருசார் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் தெரிவித்து முறைகேடாக ஒப்பந்தங்கள் விடப்படுகிறது. கொமாரபாளையம் நகராட்சி சார்பில் நலத்திட்டங்கள் துவக்க விழாவிலோ, கூட்டங்களிலோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புகைப்படங்கள் இல்லாது, சுயேட்சை நகர் மன்ற தலைவர் புகைப்படத்தோடு ஆணையாளர்

ஒப்புதலோடு நடைபெறுகிறது. இதுபற்றி ஆணையாளர் திரு.விஜயகுமார் அவர்களிடம் பலமுறை முறையிட்டும் அவர் அதற்கு முறையான பதில் தராமல் சுயேட்சை நகர்மன்ற தலைவரின் கைபாவையாகவே செயல்படுகிறார்.

மேலும் கடந்த 22.07.2022 அன்று மண்டல அளவிலான நகராட்சி ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு நகர்புர வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பல்வேறு துறை அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலையில் சேலத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஒவ்வொரு நகராட்சியின் சார்பில் ஆணையாளரும், நகர்மன்ற தலைவரும் பங்கேற்க வேண்டும். ஆனால் கொமாரபாளையம் சுயேட்சை நகர்மன்ற தலைவர் வெளிநாடு சுற்றுலா சென்றதால் அவர் பங்கேற்கவில்லை. அதன் பொருட்டு துணை நகர்மன்ற தலைவரான எனக்கு அந்த கூட்டத்தில் பங்கேற்க எல்லாவிதமான உரிமைகளும் இருந்தும், நான் ஆணையாளர் திரு.விஜயகுமார் அவர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளேன்.

மேலும் ஒரு நகர்மன்ற தலைவர் வெளிநாடு செல்லும் போது முறையான அனுமதி பெற்றிருக்க வேண்டும். இங்கு அந்த அனுமதி பெறப்பட்டதா என்ற எந்த விவரமும் இல்லை. துணை தலைவரான என்னிடம் இதுபற்றி எந்தவொரு தகவலும் அளிக்கப்படவில்லை.

தமிழக அரசால் நகராட்சிகளுக்கென நடத்தப்பட்ட ஒரு ஆய்வு கூட்டத்தில் நகர்மன்ற தலைவர் இல்லாத போது துணை தலைவரான நான் கலந்து கொண்டு மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பற்றி எடுத்து கூறி தீர்வு காணப்பட வேண்டும். இங்கு என்னுடைய உரிமை கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் திரு.விஜயகுமார் என்பவரால் பறிக்கப்பட்டிருக்கிறது. எனவே, கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் திரு.விஜயகுமார் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 01.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் கொமாரபாளையம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் தனது 25.08.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“திரு.இரா.விஜயகுமார், கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் பணிமாறுதல் காரணமாக 22.08.2022 பிற்பகல் முதல் கொமாரபாளையம் நகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மேலும், நகராட்சி பொறியாளரான நான் 22.08.2022 பிற்பகல் முதல் ஆணையாளர் பொறுப்பினை ஏற்று வகித்து வருகிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொமாரபாளையம் நகராட்சி நிர்வாகத்தில் அலுவல் ரீதியாக நடைபெறும் அனைத்து கூட்டங்களுக்கும், விழாவிற்கும், நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

கொமாரபாளையம் நகராட்சியில் நடத்தப்படும் அனைத்து ஒப்பந்தங்களுக்கான அறிவிப்புகளை அலுவலக விளம்பரப்பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தப்படுகிறது. மேலும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை ஏற்கனவே பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு வருகிறது. மேலும் ரூ.10,00,000/–க்கு மேற்பட்ட ஒப்பந்த

பணிகளை tn.tenders.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதில் முறைகேடு ஏதுமில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் ஒப்பந்தப்பணிகளை உறுதி செய்ய மன்றத்திற்கு பொருள் வைத்து மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் தான் ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்படுகிறது. தன்னிச்சையாக ஆணையாளரால் ஒப்பந்தப்புள்ளிகள் உறுதி செய்யப்படுவதில்லை.

மேற்படி புகார் மனுவில் குறிப்பிட்ட கூட்டமானது நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் குறை தீர்க்கும் கூட்டமாகும். இக்கூட்டமானது சுயேட்சை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்டமாகும். இதில் ஆணையாளர் என்ற முறையில் திரு.விஜயகுமார் கலந்து கொண்டார். இது தொடர்பாக நேரில் முறையிட்டவர்களுக்கு மேற்படி, ஆணையாளரால் தகுந்த விளக்கம் நேரில் கொடுக்கப்பட்டுள்ளது.

22.07.2022 அன்று மண்டல அளவிலான நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்திற்கு நகர்மன்றத் தலைவருக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டது. நகர்மன்றத் தலைவர் மேற்படி தினத்தில் வெளிநாடு சென்றதால் அவர் பங்கேற்கவில்லை. ஆணையாளர் என்ற முறையில் திரு.விஜயகுமார் பங்கேற்றார்.

நகர்மன்றத் தலைவர் தனது சொந்த வேலையாக வெளிநாடு செல்லும் முன் 12.07.2022ம் தேதியன்று நகராட்சியில் தனது கடிதத்துடன் உரிய தகவல் தெரிவித்துள்ளார். நகர்மன்றத் தலைவர் வெளிநாடு செல்லும் கடிதத்தை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முறைப்படி அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் கொமாரபாளையம் நகராட்சி ஆணையரும் 29.08.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.08.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. கோ. வெங்கடேசன் 29.08.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாமல், "ஆணையாளர் திரு.விஜயகுமார் பணிமாறுதல் பெற்று சென்று விட்டார். அதனால் நான் அவர் மீது அளித்த புகாரை திரும்ப பெற்றுக்கொள்கிறேன்" என தனது 25.08.2022 நாளிட்ட கடிதத்தின் மூலம் முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான கொமாரபாளையம் நகராட்சியில், நகராட்சிப் பொறியாளராகவும் மற்றும் நகராட்சி ஆணையாளர் பொறுப்பில் பணிபுரியும் திரு.எ.ராஜேந்திரன் என்பவர் 29.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கொமாரபாளையம் நகராட்சியில் நடத்தப்படும் அனைத்து ஒப்பந்தங்களுக்கும் அறிவிப்புகளை அலுவலக விளம்பரப் பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. அதே போன்று பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு சார்பு செய்யப்படுகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளி குறித்து மன்றத் தீர்மானம் பெற்று தீர்மானத்தின் அடிப்படையில்தான் ஒப்பந்தம் அளிக்கப்படுகிறது. எனவே, இதில் முறைகேடு ஏதுமில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நகர்மன்றத் தலைவர் திரு.விஜய்கண்ணன் குடும்ப நிகழ்ச்சியை முன்னிட்டு வெளிநாடு செல்வது குறித்து 12.07.2022 அன்று நகராட்சிக்கு கடிதம் அளித்துள்ளார் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னால் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனது 25.08.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, கொமாரபாளையம் நகராட்சி ஆணையரின் (பொறுப்பு) விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- மனுதாரர் திரு.கோ.வெங்கடேசன் என்பவர் தனது முறையீட்டு மனுவில் கொமாரபாளையம் நகராட்சியில் நலத்திட்டங்கள், ஒப்பந்தங்கள் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் ஆகியவற்றை தனக்கும், பிற நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்காமல் ஒரு சாராருக்கு மட்டும் தெரிவிப்பது, மன்றத்தலைவர் முன் அனுமதியின்றி வெளிநாடு பயணம் மேற்கொண்டது, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்க விடாமல் ஆணையர் செயல்பட்டது என பணியிட மாறுதலில் சென்ற நகராட்சி ஆணையர் திரு.விஜயகுமார் என்பவர் மீது புகார் தெரிவித்துள்ளார். ஆனால் சம்பந்தப்பட்ட ஆணையாளர் பணியிட மாறுதல் செய்யப்பட்டுவிட்டதையொட்டி, மேற்கண்ட நேரடி விசாரணைக்கு ஆஜராகாமல் தனது மனுவை திரும்பப் பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். இருப்பினும் அவருடைய புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளின் தன்மையின் அடிப்படையில் இம்மனுவினை விசாரணை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்துள்ளது.

- கொமராபாளையம் நகராட்சியில் அனைத்து ஒப்பந்தங்களுக்கான அறிவிப்புகளை அலுவலக விளம்பரப் பலகையில் ஒட்டியும், நகராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தாரர்களுக்கு சார்பு செய்தும் ரூ 10 இலட்சத்திற்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இணையதளத்தில் வெளியிட்டும் நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பிறகே ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதால், அனைத்து தரப்பினருக்கும் ஒப்பந்த அறிவிப்புகள் தெரிவிக்கப்படுகிறது என்பது ஆணையரின் அறிக்கையின் மூலம் தெரியவருகிறது.

- 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 12 BBன் கீழ் நகராட்சி நகர்மன்றத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிவழிமுறையில், மாநில அரசின் எழுத்து வடிவிலான அனுமதியின்றி வெளிநாட்டு பயணம் மேற்கொள்ளக்கூடாது என வரையறுக்கப்பட்ட நிலையில், நகராட்சி மன்றத்தலைவர் பதவிவழிமுறையில் அல்லாமல், அவரது குடும்ப நிகழ்ச்சி காரணமாக வெளிநாடு பயணம் மேற்கொள்வது குறித்து முன்கூட்டியே தனது 12.07.2022 நாளிட்ட கடிதம் மூலம் கொமாரப்பாளையம் நகராட்சியில் தகவல் தெரிவித்துள்ளதை ஆவணத்தின் மூலம் அறியமுடிகிறது. நகர்மன்றத் தலைவர் வெளிநாடு பயணத்தில் இருந்த சமயத்தில், மாண்புமிகு நகராட்சி துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ந0டைபெற்ற மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டத்தில் கொமாரபாளையம் நகராட்சி சார்பாக நகர்மன்ற துணைத்தலைவர் கலந்து கொண்டு நகராட்சி நிர்வாகத்தின் மூலம் மக்களுக்கு ஆற்றும் பணிகளையும் அதன் தொடர்பான கருத்துகளையும் எடுத்துரைப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்காமல், நகராட்சி ஆணையர் மட்டும் கலந்து கொண்ட செயலை நகராட்சி ஆணையாளர் தவிர்த்திருக்கலாம்.

- மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு நகர்மன்ற உறுப்பினர் அதுவும் நகராட்சியின் நகர்மன்ற துணைத்தலைவர் தனக்கு, நகராட்சியில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்தான தகவல்களை ஆணையாளர் அளிப்பதில்லை என புகாராக இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனு செய்திருப்பதன் மூலம் கொமாரபாளையத்தின் அப்போதைய நகராட்சி ஆணையாளரின் பொறுப்பற்ற தன்மையும் தனது கடமையிலிருந்து தவறி இருப்பதும் வெளிப்படுத்துகிறது. இவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட, பணியிட மாறுதலில் சென்ற நகராட்சி ஆனையாளர் திரு.விஜயகுமார் என்பவர் மீது உரிய விதிகளின் கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. கோ. வெங்கடேசன்,
கொமாரபாளையம் நகராட்சி நகர்மன்ற துணைத் தலைவர்,
10 A–2, சுள்ளிமடைத் தோட்டம், கிழக்கு காலனி,
கொமாரபாளையம் – 638 183, நாமக்கல் மாவட்டம்.

2) ஆணையாளர், கொமாரபாளையம் நகராட்சி,
கொமாரபாளையம் – 638 183, நாமக்கல் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

13/9/22

செயலாளர்

15/09/22